Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# The State and Contradictions of Relationships in *Purananuru*

**N. Kumutha,** Assistant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore.
ORCiD: https://orcid.org/0000-0002-9743-2170
DOI: 10.5281/zenodo.7312503

## Abstract

*Relationships are not just about the individual they are the energy that builds society. From the Sangam literary period, the relationship between the people the male-female relationship, the relationship between the parents and the people, the relationship with the individual society, and the relationship between the artists can be found. Of these, economic interests take on a dual nature, either in the form of animosity or hostility. Relationships play a role in both the inner and outer spheres of human life. The literature reveals that relationships are seen to be intertwined by the infrastructures of love, wealth, fame, valour, and love, both internally and externally. The expression of these relationships is not only the singularity of the love of good relations but also the contradictions within the relationship. The purpose of this article is to examine how "Purananuru", one of the Sangam literature, reveals that society has been functioning since the Sangam period, depending on both good and evil relations.*

**Keywords:** State, Contradictions, Relationships, *Purananuru.*

## References

[1] Avvai Duraisamy Pillai. *Puranaanuru,* First edition, Thirunelveli Theninthiya Saivasithantha Nool Pathippu. Chennai-600001

[2]Na. Manikkavasakam. *Pathupaatu* (moolamum vilakka uraiyum), Uma Pathippakam, Chennai-600001

[3] Ilampuranaar Urai. *Tholkappiyam* (moolamum vilakka uraiyum). Saarathaa Pathipakam. Chennai -600014

[4] Namakkal Ve. Ramalingam Pillai. *Thirukkural Thelivurai*. Thendral Nilayam. Chithambaram. 608001.

[5] Adiyaarku Nallar Urai. *Silapathikaaram Moolamum Arumpathauraiyum*. U. Ve. Sa. Pathippu. 8th Edition 1968.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# புறநானூற்றில் உறவுகளின் நிலைப்பாடுகளும் முரண்பாடுகளும்

**நா. குமுதா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅரகிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புதூர்.
ORCiD: https://orcid.org/0000-0002-9743-2170
DOI: 10.5281/zenodo.7312503

**ஆய்வுச்சுருக்கம்**

*உறவுகள் என்பது தனிமனிதனைப் பற்றியது மட்டுமல்ல அவை சமுதாயத்தை கட்டமைக்கும் ஆற்றல். சங்க இலக்கிய காலம் முதல் ஆண்-பெண் உறவு, பெற்றோருக்கும் மக்களுக்குமான உறவு, தனி மனிதன் சமூகத்துடனான உறவு, அரசர்களுக்கும் சமுதாயத்திற்குமான உறவு அரசர்களுக்கும் கலைஞர்களுக்கிடையேயான உறவு என ஒவ்வொரு நிலை சார்ந்து அனைத்து மக்களுக்கும் இடையே உள்ள உறவுகளின் கட்டமைப்பை காணலாம். பொருளாதார நலன்கள் உறவுகளுக்கிடையே பகைமை அல்லது இணக்கம் என்கிற வடிவில் இரட்டை இயல்பைப் பெறுகின்றன. மனித வாழ்க்கையின் உள் மற்றும் வெளிக் கோளங்களில் உறவுகள் பங்கு வகிக்கின்றன. உள்கட்டமைப்புகளால் உறவுகள் பின்னிப் பிணைந்திருப்பதை இலக்கியம் வெளிப்படுத்துகிறது. அன்பு, செல்வம், புகழ், வீரம் மற்றும், அகத்திலும் புறத்திலும் கட்டமைந்திருப்பதை காணலாம். உறவுகள் நல்ல உறவுகளின் அன்பின் தனித்தன்மை மட்டுமல்ல, உறவுக்குள் இருக்கும் முரண்பாடுகளையும் எப்படி வெளிப்படுத்தியுள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். சங்கப் புற இலக்கியங்களுள் ஒன்றான புறநானூறு முதன்மை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள்**: புறநானூறு, உறவு, நிலைப்பாடு, முரண்பாடு.

## முன்னுரை

மனித இனத்தின் ஒழுக்கக் கூறுகள் உறவுகளால் கட்டமைக்கப்பட்டுள்ளன. அவைச் சமுதாயத்தில் மனிதனின் வாழ்வியலை வரையறுக்கக்கூடிய முக்கிய அங்கமாக செயல்படுகின்றன. உறவுகள் தேர்ந்தெடுப்பதிலும் கவனமாக இருக்க வேண்டியது அவசியமாகும் ஏனெனில் மனித வாழ்வின் மகிழ்ச்சியை அவைகளை தீர்மானிக்கின்றன. இத்தகைய தன்மையுடைய உறவு என்னும் அமைப்பு தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை ஆராய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றன. சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களில் அகம் புறம் என்ற இரு திணை பகுப்புகளாக அமைந்துள்ளன. இவற்றில் ஆக இலக்கியங்கள் நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு கலித்தொகை அகநானூறு என்பனவாகும். அக இலக்கியங்களில் தலைவன் தலைவியின் உறவு, நற்றாய் தலைவியின் உறவு, செவிலித்தாய் நற்றாய் உறவு, தோழி தலைவி

உறவு, தலைவன் தோழி உறவு, செவிலித்தாய் தோழி உறவு எனப் பல்வேறு நிலைகளில் உறவுமுறைகள் அவற்றின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. புற இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு உறவுகளை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதோடு உறவுகளுக்ககுள்ளான முரண்பாடுகளும், பிணைப்புகளும் சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லும் விழுமியங்களை வெளிக்கொணரும் நோக்கோடு இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**கோப்பெருஞ்சோழன் அவர்தம் புதல்வர்கள் (தந்தை, மகன் உறவு நிலை)**

அரசு கட்டில் உரிமையை "முறைமுதல் கட்டில் "என்பர். அரசு கட்டில் ஏறும் முறை முதல் மகன் வாயிலாகவே நிகழ்வது அக்காலத்திலேயே நன்கு நிலைத்துவிட்டது. இதுபோன்ற சர்ச்சைகள் இலக்கியங்களில் விரவி காணப்படுகின்றன்.

> **சேரமன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் மக்கள் இருவர்,அதாவது மூத்தவனான செங்குட்டுவனும் இளையவனான இளங்கோவனும்.இவ்விருவரில் இளையவனே அரியணை ஏறப் போவதாகக் கணி அறிவித்தனன்.மூத்த மகனான செங்குட்டுவன் அரசுக் கட்டிலுக்கு தன்மை உரிமை மறுக்கப்பட்டது என்று கருதி வெகுண்டான். அரசு காட்டிலுக்கு உரியவனான அண்ணனோடு வருத்தம் மிகாமலிருக்கும் பொருட்டு இளையவன் துறவு பூண்டான் என்கிறது *சிலப்பதிகாரம்* (172-182).**

தந்தை மகன் உறவு என்பது சமுதாயத்தில் மிக முக்கியமான அங்கமாக திகழ்கின்ற உறவு முறையாகும். இத்தகைய உறவுகளுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் புறநானூறு இலக்கியத்தில் கோப்பெருஞ்சோழன் அவர் தம் புதல்வர்கள் இடையே ஏற்பட்ட போரின் மூலமாக வெளிப்படுத்துகின்றது. உறையூரிலிருந்து ஆட்சி புரிந்த மூவேந்தர்களில் ஒருவன் கோப்பெருஞ் சோழன்.அரசு பதவிக்காக புதல்வர்கள் போர் தொடுத்து வந்ததனை,

> **நின் தலை வந்த இருவரை நினைப்பின்**
> **தொன்று உறை துப்பின் நின் பகைஞரும் அல்லர்**
> **அமர்வெங் காட்சியோடு மாறு எதிர்பு எழுந்தவர்**
> **நினையும் காலை நீயும் மற்றவர்க்கு**
> **அனையை அல்லை (புறம் -213)**

உன்னோடு பகைகொண்டு போர்புரிய வந்தவர்கள் சேரரோ பாண்டியரோ அல்லர். போரில் வெற்றி பெறும் நோக்கத்தோடு உன்னை எதிர்த்து வந்தவர்களை சற்று சிந்தித்துப் பார்த்தால், நீ அவர்களுக்கு பகைவன் அல்லன். பகைவர்களைக் கொல்லும் யானை உடைய தலைவா! பெரும் புகழை அடைந்து, நீ தேவருலகம் சென்ற பிறகு உன் நாட்டை ஆளும் அரசுரிமை அவர்களுக்கு உரியது தானே? உன்னோடு போர் செய்ய புறப்பட்டு வந்திருக்கும் ஆராயும் திறனும் அறிவும் இல்லாத உன் மக்கள் தோற்றால் உனக்குப் பிறகு உன் பெருஞ்செல்வத்தை யாருக்குக் கொடுக்கப் போகிறாய், நீ அவரிடம் தோற்றால் உன் பகைவர்கள் அதை கண்டு

மகிழ்வார்கள் என்று அறிவுரை கூறி போரை தடுத்து நிறுத்த முயன்ற ஆதலால் **ஒழித்த தாயம் அவர்க்கு உரித்து அன்றே** என்ற புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார் குறிப்பிடும் இக்கருத்து வரிகள் சங்க காலத்திலேயே அரசு உரிமைக்காக தந்தையை எதிர்த்த மகன்களின் செயல்பாடு அரசியல் பண்பாட்டில் முரண்பட்ட சூழலையும், உறவுகளுக்கு உள்ளான முரண்பட்ட சூழலையும் வெளிப்படுத்துகின்றன.தொல்காப்பியர் ‘தாயத்திநடையா’ என்று குறிப்பிடுகிறார். தாயம் என்பதனை நச்சினார்க்கினியர் ‘தந்தையுடைய பொருள்களாய் மக்கள் எய்தூதற்குரிய பொருள்கள்’ என்று விளக்கினார். (தொல். பொருள்: 221). பதிற்றுப்பத்தில் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய அரிசில்கிழார்,

**சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்**
**காவற்கமைந்த அரசு துறை போகிய**
**வீறுசால் புதல்வற் பெற்றனை (பதிற்றுப் பத்து -74)**

என்றது குறிப்பிடத்தக்கது. தன் புதல்வர்கள் போர் தொடுத்து வந்ததாலும் பகையின் காரணத்தால் கோப்பெருஞ்சோழன் தன் மகன்களுடன் போர் செய்யத் தொடங்கினான். ஆனால் புல்லாற்று எயிற்றியனார் போன்றப் புலவர் பெருமக்களின் அறிவுரைக்கு இணங்கிப் போரை நிறுத்தினான். போரை நிறுத்தினாலும் கோப்பெருஞ்சோழன் மனவருத்தத்துடன் இருந்தான். அவ்வருத்தத்தால் அவன் வடக்கிருந்து உயிர் நீக்க துணிந்தான். தன் புதல்வர்களின் செயலால் வடக்கிருந்து உயிர்நீத்த தந்தையின் வரலாறு சங்க கால வரலாற்றில் தந்தை மகன் உறவு நிலை முரண்பாடுகளை எடுத்தியம்புகின்றன.

**குமணன், இளங்குமணன் (அண்ணன், தம்பி உறவு நிலை)**

கடையேழு வள்ளல்களின் காலத்திற்குப் பிறகு குமணன் என்ற வள்ளல் இருந்தான். முதிர மலைக்கும் அதனைச் சார்ந்த பகுதிகளுக்கும் தலைவனாக விளங்கியவன். தன் தம்பியால் நாடு கவரப்பட காட்டில் வாழ்ந்தவன். குமணன் வள்ளல் தன்மையினாலும், வெற்றிகளாலும் பெரும் புகழ்பெற்றதை கண்டு பொறாமை கொண்ட அவன் தம்பி இளங்குமணன் குமணனிடம் நாட்டை கைப்பற்றினான். குமணன் காட்டிற்குள் வாழ்ந்து வந்தான். அச்சமயம் பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் குமணனை காட்டில் கண்டு அவனைப் புகழ்ந்து பாடினார்

**…நாடு இழந்ததனினும் நனி இன்னாது என**
**வாள் தந்தனனே தலை எனக்கு ஈய (புறம் -168)**

பெருந்தலைச்சாத்தனாருக்கு அழிப்பதற்கு மன்னனிடம் பொருள் ஏதும் இல்லாமையால் “பாடும் பெருமை உடைய பரிசிலன் திரும்புதல் கண்டு வாடினனாகி “என் நாட்டை நான் இழந்ததை விட இப் பரிசிலன் வாடித் திரும்புதல் கொடிது என்று எண்ணித் தன் தலையைக் கொடுக்கும் வகையில் வாளைத் தந்தான். குமணன் இளங்குமணன் இருவரும் சகோதரர்களாக இருந்த போதிலும் அரசியல் சூழல் காரணமாக இருவருக்கும் இடையே ஏற்பட்ட சகோதர முரண்பாடுகளில் குமணனின் வள்ளல் சிறப்பு இளங்குமணனின் செயல்களின்று மேலோங்கி நிற்பதை அறிய முடிகின்றன.

**இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே உள (திருக்குறள் -223)**

யான் ஏழை என்றும் பொருள் இல்லாதவன் என்றும் இரப்போன் சொல்லும் முன் அவன் குறிப்பறிந்து கொடுத்தல் சிறப்பாகும் என்னும் குறளுக்கு ஒப்பாக குமணன் விளங்கியமை காண முடிகின்றன.

**சோழன் நலங்கிள்ளி, சோழன் நெடுங்கிள்ளி (சகோதர உறவு)**

நாட்டைக் கைக்கொள்ளக் கருதியோ அல்லது தன் நாட்டின் எல்லையை விரிவுபடுத்தல் பொருட்டோ ஒரு அரசன் வேற்று நாட்டு அரசனோடு போர் கருதி செல்லுதல் மரபு. பொருளாதாரம் கருதியோ அல்லது தன்னுள் யார் பெரியவன் என்னும் காரணத்தினால் ஒரே குலத்தில் பிறந்த இருவரும் போரிட்ட வரலாற்று நிகழ்வை,

**நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே**
**பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே**
**ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே; (புறம் -45)**

இங்கு போர் புரிபவர்களில் யாரும் கரிய பனையின் வெண்ணிறப் பூ மாலை அணிந்தவன் அல்லன்; கரிய வேம்பின் மாலையை அணிந்தவன் அல்லன். உன்னுடைய மாலை ஆத்தி பூக்களால் தொடுக்கப்பட்டது, உன்னோடு போர் புரிபவன் மாலையும் ஆத்திப்பூவால் தொடுக்கப்பட்டதுதான். இருவரில் ஒருவர் தோற்றாலும் தோற்பது சோழனின் குடிதான் என்று புலவர் கோவூர் கிழாரின் பாடல் ஒரு குடிப்பிறந்த உறவுகளுக்குள்ளான இருக்க வேண்டிய மேன்மையை எடுத்துரைக்கின்றன.

**விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா**
**ஆக்கம் பலவும் தரும் (குறள் -522)**

அன்பில் நீங்காத சுற்றத்தார் அமைந்தார் ஆனால் அது குறைவில்லாமல் வளருகின்ற பல செல்வ நலன்களையும் ஒருவனுக்கு கொடுப்பதாகும் என்கிறது வள்ளுவம்.

**பேகனும் அவன் மனைவி கண்ணகியின் உறவுநிலை**

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து (குறள் -48)**

முறைப்படி நடந்துகொண்டு தர்ம நியாயம் தவறாமல் குடும்பம் நடத்த கிறவன் துறவு பூண்டு தவம் செய்பவர்களை விட பொறுப்பும் சகிப்புத்தன்மையும் உடையவன் என்கிறார் வள்ளுவர். பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து பரத்தை ஒருத்தியோடு வாழ்வதைக் கேள்வியுற்ற பரணர் பேகனுக்குக் கூறும் அறிவுரையாக,

**இஃதியாம் இரந்த பரிசில் அஃது இருளின்**
**இளமணி நெடுந்தேர் ஏறி**
**இன்னா உறைவி அரும்படர் களை மே! (புறம் -145)**

என்கிறார். பாணன் ஒருவன் பாட்டிசைக்க கேட்ட கண்ணகி கண் கலங்குகிறாள், அதைக்கண்ட பாணன் அம்மையே தாங்கள் என் தலைவன் பேகனுக்கு உறவினரோ என்று வினவுகிறான் பானன் கண்ணகியோடு நடத்திய உரையாடலை பேகனுக்கு எடுத்துரைத்தும் பேகன் கண்ணகிக்கு அருள் செய்யாமல் இருப்பது மிகவும் கொடிய செயல் என்று பரணர் பேகனே நாங்கள் இங்கு பசியால் வரவில்லை, எமக்கு சுற்றமும் இல்லை, நீ இன்றே புறப்பட்டு உன் மனைவி கண்ணகியிடம் சென்று அவளின் துயரத்தைத் தீர்க்க வேண்டும் என்று அறிவுரை வழங்குவதாக அமைந்துள்ள பரணரின் பாடல் இல்லற வாழ்வில் சங்க காலத்தில் கணவன் மனைவி இடையேயான உறவு நிலையினை எடுத்துக்கூறுகிறது.

**கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு**

வேந்தே! பிசிராந்தையாரும் நீயும் ஒருவரை பற்றி ஒருவர் கேள்விப்பட்டு இருக்கிறீர்களே தவிர நீங்கள் இருவரும் சிறு பொழுது கூட ஒருவரை ஒருவர் நேரில் கண்டதில்லை. இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன நன்கு பழகிய உரிமை உடைய நண்பனாக இருப்பின் இந்நிலையில் அவர் உன்னுடன் இருப்பதுதான் முறை. ஆயினும் அவர் முறைப்படி நடத்தலரிது என்று சந்தேகப் படாதீர்கள் அறிவு நிறைந்த சான்றோர்களே,

**கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்**
**காண்டல் இல்லாது யாண்டுபல கழிய, (புறம் 216)**

ஒருவரை ஒருவர் காணாமலேயே தங்கள் மீது மிகச் சிறந்த நட்பு கொண்டிருந்தவர்கள் என்பதனை அறியமுடிகின்றது.

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும் (குறள் 785)**

ஒருவனோடு ஒருவன் நட்புக் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை. உணர்ச்சிதான் இருவருக்கும் ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுத்துவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும் என்ற வள்ளுவனின் வாக்கிற்கு இணங்க வாழ்ந்தவர்கள் கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் இதற்கிணங்க,

**வருவன் என்ற கோனது பெருமையும்,**
**அது பழுது இன்றி வந்தவன் அறிவும்,**
**வியத்தொறும் வியத்தொறும் வியப்பு இறந்தன்றே (புறம் 217)**

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த பொழுது பிசிராந்தையார், அவனை காண வருவாரோ இல்லையோ என்ற சான்றோர்கள் ஐயப்பட்ட போது கோப்பெருஞ்சோழன் தன் நட்பின் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக உடனே வருவான் அவனுக்கு என்று ஒரு இடத்தை ஒதுக்குங்கள் என்று கூறினார். அந்த உணர்ச்சி பொய்யாகதபடி, நட்பே பற்றுக்கோடாகவும் கொண்டு, இந்த நேரத்தில் இவன் வருவான் என்று சாத்துதலும் மச்சான் ரோஹித் தலைவனின் பெருமை தோன்ற வந்தப் பழுதற்ற தன்மையும் எண்ணந்தொறும் வியப்பாக உள்ளது என்கிறார் பொத்தியார்.

**பாரி கபிலர் நட்புறவு**

மூவேந்தர்களும் பொறாமை கொள்ளும் அளவிற்கு பாரியின் புகழைப் பாடி வந்தார் கபிலர், இந்நிலையில் மூவேந்தர்களும் சேர்ந்து பாரியை சூட்சுமமாக வஞ்சித்துக் கொலை செய்தனர், பாரிக்கு அங்கவை சங்கவை என்று இரண்டு மகள்கள் இருந்தனர். பாரியின் இறப்பிற்கு பின்பு இவ்விரு மகள்களையும் தன் மகளாக எண்ணி அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை செய்து வந்தார் கபிலர். உயிர் நண்பன் பார் இன்றி இந்நிலவுலகத்தில் வாழ்வதையே பெருஞ்சுமையாகக் கருதினார் கபிலர். பாரியின்றி கபிலர் உயிரற்ற உடல் போல் உணர்ந்தார். இம்மையில் பிரிந்துவிட்ட பாரியை மறுமையில் இணைந்து வாழ விருப்பம் கொண்டவரானார். தென்பெண்ணை ஆற்றுக் கரையில் வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பிருந்து உயிர் விட்டார் கபிலர்.அப்போது அவர் பாடிய பாடலில் பாரியின் மறைவுக்கு அவர் வருந்திய வருத்தமும் நண்பனின் பிரிவால் அவர் பட்டத் துயரமும் நன்கு புலனாகும்.

**…இம்மை போலக் காட்டி, உம்மை**
**இடையில் காட்சி நின்னோடு**
**உடன் உறைவு ஆக்கு! உயர்ந்த பாலே! (புறம் -236)**

மாவண் பாரி! என்னை நீ பலகாலம் பேணிக்காத்தாய். அது போழ்து என் உயிர் நண்பனாக இருந்தாய். ஆனால் நீ இவ்வுலகை விட்டு பிரியுங்கால் என்னை உன்னுடன் வரவிடாது “ இங்கேயே இருந்து பின் வருக” என்று கூறிச் சென்று விட்டாய். இனியும் உன்னைப் பிரிந்து என்னால் தனித்து வாழ இயலாது. இப்பிறவியில் நம்மை நட்பால் சேர்த்து வாழச் செய்த நல்லூழ் மறுமையிலும் உன்னுடன் வாழும் வாழ்வை ஈவதாக!” என்று பாடி மறைந்தார். இன்றும் கோவலூர் அருகே கபிலக்கல் ஒன்று இருக்கிறது. அது கபிலரின் வடக்கிருந்தச் செய்தியைக் கூறிக்கொண்டிருக்கிறது.

**சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை (இல்லற உறவு)**

சங்க இலக்கியத்தில் பல்வேறு பாடல்களில் தன் கணவனின் இழப்பால் வருந்தும் மனைவியின் துயரம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவற்றில் தன் மனைவியின் இறப்பிற்கான வருந்தும் ஒரு கணவனின் துயரம் புறநானூற்றில் வெளிப்படுத்தி இருப்பது இல்லற உறவின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையின் மனைவி இறந்தாள். அவள் உடல் ஈமத்தீயில் வைத்து எரிக்கப்பட்டது. அவள் உடல் தீக்கிரையாக்கியதை தன் கண்களால் கண்ட மாக்கோதை தாங்கமுடியாத துயரம் அடைந்த நிலையில்,

**…ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை**
**இன்னும் வாழ்வல் என் இதன் பண்பே (புறம் 245)**

என்று களர் நிலமாகிய பாழிடத்தில், வெட்டவெளியில் தீயை விளைவிக்கும் விறகுகளால் அடுக்கப்பட்ட ஈமத்தீயின் ஒளிபொருந்திய படுக்கையில் படுக்க வைக்கப்பட்ட என் மனைவி மேலுலகம் சென்றாள். ஆனால், நான் இன்னும் வாழ்கின்றேனே! என்றவாறு அமைந்துள்ள

இவ்வரிகள் கணவன் மனைவியின் மீது வைத்துள்ள அன்பின் வெளிப்பாட்டை எடுத்துரைக்கிறது.

**புலவர் பொன்முடியார் (உறவுகளின் கடமை உணர்த்துதல்)**

சங்க காலப் பெண்பாற் புலவர்களில் ஒருவர் பொன்முடியார். ஒரு மகன் பிறந்ததில் இருந்து அவனை சமுதாயத்தில் சிறந்த ஆண் மகனாக பார்ப்பதுவரை தாய், தந்தை என்னும் உறவின் கடமைகள் பற்றியும், யார் யாருக்கு என்னென்ன கடமைகள் இருக்கிறது என்பது வரை இப்பெண்பாற் புலவர் புறநானூற்றில் மிக ஆழமாக பாடியிருக்கிறார்.

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே (புறம் -312)**

மகனைப் பெற்று வளர்த்து பாதுக்காத்தல் தாயாகிய என்னுடைய தலையாய கடன் என்றும்.அவனை நற்பண்புகள் நிறைய பெற்றவனாக ஆக்குதல் தந்தைக்குக் கடமை என்றும். அவனுக்குத் தேவையான படைக்கருவிகளை உருவாக்கிக் கொடுத்தல் கொல்லரின் கடமை.அவனுக்கு போரின் அறங்களைக் கற்பித்து வழியனுப்பி வைத்தல் மன்னரின் கடமை.ஒளியுடன் விளங்கும் வாளைக் கையில் ஏந்தித் தடுத்தற்கரிய போரைச் செய்து பகைவரின் யானையைக் கொன்று வெற்றியுடன் மீண்டும் வருவது ஆண்மகனின் கடமை. சங்ககாலத்தில் ஒரு ஆண் மகனை வீரனாக்குவது அல்லது ஒரு சிறந்த மனிதனை உருவாக்குவது என்பதில் தாய் தந்தை, மன்னன், சமுதாய மக்கள் என அனைத்து உறவுகளின் பங்களிப்பும் இன்றியமையாததாக அமைகின்றன என்பதனை உணர்த்துகிறது. ஒரு தனி மனிதனின் வளர்ச்சிக்கு அவன் மட்டுமே தனித்து செயல்பட இயலாது மாறாக தன்னை சுற்றியுள்ள உறவுகளும், சமுதாய சூழல்களும் காரணமாக அமைகின்றன என்பது உறவுகளின் முக்கியத்துவத்தை அழகாக சொல்லப்படிருப்பதை காணலாம்.

**ஔவையார் அதியமான் நட்பு**

சங்க கால கடையெழு வள்ளல்களில் ஒருவன் அதியமான்.அவனது அன்பைப் பெற்ற ஒரே பெண் புலவராக ஔவையார் விளங்கினார். அரசர்களும், புலவர்களும் போற்றும் பெருமை உடையவராக இருந்தவர்.அதியமான் நெடுமான் அஞ்சியும் ஔவையாரின் தமிழ்ப் புலமைக்காகவும், எவருக்கும் தலை வணங்காத அவரின் இயல்புக்காகவும், அவர் மேல் மதிப்பும் பற்றும் வைத்திருந்தான். *சிறுபாணாற்றுப்படை* கூட அதியமான் என்றவுடன் நெல்லிக்கனியும், ஔவையுமே நினைவு படுத்துவதாக,

**கமல் பூஞ் சாரல் கவினிய நெல்லி**
**அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த (சிறுபா: 100-101)**

புறநானூற்றில் பழமை வாய்ந்த பெரிய மலையின் அரிதாக வளர்ந்த சிறிய இலையுள்ள நெல்லியின் இனிய கனியை, அதன் அருமையை எனக்கு சொல்லாது உன் மனத்துள்

வைத்துக்கொண்டு, சாகாது இருக்க எனக்கு தந்தாய் என்று ஔவ்வை அதியனிடம் கேட்க, அதியமான் அக்கனியை தான் உண்டால் எனக்கு மட்டுமே நன்மை. ஆனால் மிகச் சிறந்த தமிழ் புலமையும், அறிவும் உடைய ஔவை உண்டால் தமிழுக்குப் பெருமை, இந்நாட்டிற்கும் பெருமை என்று கூறினான்.சங்ககால மன்னர்கள் அனைவரும் தமிழ் மீது பற்றுடையவராகவே விளங்கினர்.

**அண்ணன், தம்பி உறவின் சிறப்பு**

புறநானூற்றில் சகோதரத்துவ முரண்பாடுகளாக குமணன், இளங்குமணன், சோழன் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி உறவுமுறைகள் இவ்வாய்வில் எடுத்துக்காட்டடபட்டுள்ளன. அதேபோன்று சகோதரத்துவ உறவின் பிணைப்பைக் காட்டும், புலவர் அரிசில் கிழாரின் பாடல் குறிப்பிடத்தக்கது.ஒரு சமயம் நடந்த போரில், வீரன் ஒருவனைப் பகைவரின் படைவீரன் கொன்றான். அதனை அறிந்த அவ்வீரனின் தமையன் அவனை கொன்று வீழ்த்துவதற்காக தேடுகிறான் என்பதை,

**நெருநல் எல்லைநீ எறிந்தோன் தம்பி**
**அகல்பெய் குன்றியின் சுழலும் கண்ணன்**
**பேரூர் அட்ட கள்ளிற்கு**
**ஓர்இல் கோயின் தேருமால் நின்னே (புறம் -300)**

இவ்வரிகள் நேற்று, பகற்பொழுதில் நீ கொன்றவனின் தம்பி, அகலிலிட்ட குன்றிமணிப்போல் சுழலும் கண்களோடு, பெரிய ஊரில், உன்னைத் தேடுகிறான். என்று எச்சரிப்பதாக அமைந்துள்ளன.

**எம்முன் தப்பியோன் தம்பியொடு ஒராங்கு**
**நாளைச் செய்குவென் அமரெனக் கூறிப்**
**புன்வயிறு அருத்தலும் செல்லான் பன்மான் (புறம் -304)**

நேற்று என் முன்னோனை (அண்ணனை) கொன்றவனை தன் தம்பியையும் ஒன்று சேர்த்துக்கொண்டு “நாளை போர் செய்வேன்” என்று கூறினானாம். இன்று பசிப்புண்ணால் வலிக்கும் தன் வயிற்றுக்கு உணவு கூடத் தராமல் தன் குதிரைமேல் வருகிறானாம். அதனைக் கேள்வியுற்றதும் வெற்றிமுரசு கொட்டி வெற்றிப் போர்கள் கண்ட வேந்தன் பாசறையில் நடுங்குகிறான். அவன் சொன்ன சொல் இரண்டாகப் போவது இல்லை என்பதனை எடுத்துரைக்கும் இவ்வஞ்சினம் சகோதரத்துவ பாசத்தின் வெளிப்பாடாக கட்சிப் படுத்துகின்றன.

**முடிவுரை**

புறநானூற்றில் உறவுகளின் நிலைப்பாடுகளும் முரண்பாடுகளும் என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வுக் கட்டுரையில், தந்தை மகன் உறவு நிலை, அண்ணன் தம்பி ஆகிய சகோதரத்துவ உறவுநிலை, கணவன் மனைவி உறவு நிலை, நட்பின் உறவுநிலை, ஒரு தனி நபருக்கும் சமுதாயத்திற்குமான உறவுநிலை என்கின்ற நிலைப்பாடுகளின் அடிப்படையில்

தந்தை மகனுக்குமான உறவு நிலையில் கோப்பெருஞ்சோழன் அவர் தம் புதல்வர்கள் இடையே இருந்த உறவின் முரண்பாடுகளும், சகோதரத்துவ உறவில் குமணன் இளங்குமணன் மற்றும் சோழன் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இவர்களுக்கும் இடையேயான உறவின் முரண்பாடுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.அதே சமயத்தில் புலவர் அரிசில் கிழாரின் பாடலில் சகோதரத்துவ உறவாக தன் தமையனை கொன்ற பகைவனை கொல்வதற்காக கிளம்பியத் தமையனின் பாச உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இல்லற உறவின் மேன்மையை வெளிப்படுத்தும் விதமாக புறநானூற்றில் பேகன் அவன் மனைவி கண்ணகி இருவருக்கும் இடையேயான உறவின் முரண்பாடும், இவற்றுக்கு மாறாக சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என்னும் அரசன் தன் மனைவியின் மீது கொண்டிருந்த அன்பினையும் வெளிப்படுத்தும் உறவின் மேன்மையும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சங்ககாலத்தில் நட்பிற்கு இலக்கணமாக வாழ்ந்தவர்களே மிக அதிகம் என்பதனை புறநானூற்றில் மிக அழகாக உணர்ந்து கொள்ள முடிகிறது. பாரி கபிலர் நட்பு, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு, ஔவையார் அதியமான் நட்பு என இவர்களின் நட்புறவு இன்றளவுக்கும் தமிழர்களால் போற்றப்பட்டு வருகின்றன. இவற்றோடு இச்சமுதாயத்தில் ஒரு தனிநபரின் ஒழுக்கக் கூறுகள் அவனைச் சார்ந்த மற்ற உறவுகளால் கட்டமைக்கப்படுகின்றன என்ற மிக ஆழமான கருத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**துணைநூல் பட்டியல்**

[1] *புறநானூறு.* உ.வே. சாமிநாத ஐயர்பதிப்பு. அவ்வை துறைசாமிப்பிள்ளை உரை, கழகப்பதிப்பு, சென்னை.

[2] *தொல்காப்பியம்.* சேனாவரையார் உரை. சாரதா பதிப்பகம் சென்னை -600014. முதல் பதிப்பு மார்ச் 2005.

[3] *திருக்குறள் தெளிவுரை.* நாமக்கல்வெ. இராமலிங்கம் பிள்ளை. தென்றல் நிலையம். சிதம்பரம் -608001. முதல் பதிப்பு ஜூன் 2002.

[4] *சிலப்பதிகாரம் மூலமும் அரும்பத உரையும்.* வெ.சாமிநாத சர்மா. உ வே சா பதிப்பு. எட்டாம் பதிப்பு 1968.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.